முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1163

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.12.2022, திங்கட்கிழமை

1. தர்மவேலி கொண்ட அரங்கனே
   தவபல மிக்க தேசிகனே
   வருங்கால பேரிடர் சூழலை எல்லாம்
   வையகத்துக்கு துன்பமில்லாமல் மாற்றி அமைக்க வந்த நல்
2. நல்லதொரு மாதவராஜனே
   ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   வல்லமைபட ஞான அறிவுரை ஆசி
   வழங்குவேன் சுபகிருது தேள் திங்கள் தன்னில்
   (சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 19 ம் நாள் 05.12.2022, திங்கட்கிழமை)
3. தன்னிலே அரங்கனின் பலம்
   தரணியை மாற்றி அமைக்கக்கூடும்
   மண்ணுலகம் அரங்கன் தர்மத்தால்
   மகா பாதுகாப்புப் பெற்று சிறக்க நேரும்
4. நேர்மைகொண்ட அரங்கனின் சீடர் பெருமக்கள் மூலம்
   நிலவுலகமே ஞான உலகமாக மாறும்
   வறுமை விலகி வருங்காலங்களில்
   வையகம் அரங்கன் ஆசியாலே பலமாகும்
5. ஆகுமப்பா அன்பர்களுக்குள்ளும் தயவு என்கின்ற மகா சக்தி
   ஆற்றலாகப் பரவி உலகமெங்கும் நேர்மையும் தர்மமும்
   நீதியும் ஞானவான்கள் ஆட்சியாக மாற்றங்கூடி இனிதே காணும்
   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–